بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

அவர்கள் 06.11.2015 அன்று லண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰی تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ وَمَا تُنۡفِقُوۡا مِنۡ شَیۡءٍ فَاِنَّ اللّٰہَ بِہٖ عَلِیۡمٌ நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருட்களிலிருந்து இறை வழியில் செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினை பெற முடியாது. நீங்கள் எப்பொருளை செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான். **(3:93)**

ஒவ்வொரு நம்பிக்கையாளரும் தான் நன்மை செய்து அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற வேண்டுமென்று ஆசைப்படுகின்றார். அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு இவ்வசனத்தில் இதன் பக்கம் கவனமூட்டியிருக்கின்றான். அதாவது நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் பொருட்டு நன்மை செய்ய ஆசைப்படுகின்றீர்கள் என்றால் நன்றாக நினைவில் கொள்ளுங்கள். அந்நிலையில் நன்மை செய்ய தியாகம் அவசியமாகும். எனவே, இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக எது உங்களுக்கு மிகவும் பிரியத்திற்குரியதாக இருக்கின்றதோ அதனை தியாகம் செய்யுங்கள். அல்லது எதிலிருந்து நீங்கள் பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றீர்களோ அதனை நீங்கள் தியாகம் செய்ய வேண்டும். எந்த விஷயம் உங்களுக்கு சுகத்தையும், வசதி வாய்ப்பையும் தந்து கொண்டிருக்கின்றதோ அதனை தியாகம் செய்யுங்கள். மேலும் எவ்விஷயங்கள் உங்களின் சந்ததிகளின் எதிர்காலத்தை வளமாக்குவதற்கு உங்கள் பார்வையில் அவசியமானதாக உள்ளதோ அதனை தியாகம் செய்யுங்கள். எனவே, இந்த அனைத்து வகையான தியாகங்களும் சாதாரண வகைப்பட்ட தியாகமல்ல. செல்வம் மனிதனுக்கு எப்பொழுதும் விருப்பத்திற்குரியதாகவே இருந்து வந்திருக்கின்றது. அதைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

தங்கம், வெள்ளி, கால்நடைகள், சொத்துக்கள், தோட்டங்கள், விளை நிலங்கள் இவை அனைத்தும் மனிதனுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவையாகும். இவை அனைத்தும் மனிதனுக்கு பெருமை சேர்க்கக் கூடியவையாகும். மனிதன் அதன் மீது பெருமிதம் கொள்கின்றான். ஆசைகளில் பேரார்வம் மற்றும் பணத்தின் மீதான மோகம் மேலும் அதனைப் அடைவதற்கான முயற்சி இவை அனைத்தும் மனிதனிடம் உச்சத்தை தொட்டிருக்கின்றது. ஒவ்வொரு பிரிவிலும் பணத்தின் மீதான மோகம் வாழ்க்கையின் அத்தியாவசிய தேவை என்ற பெயரில் புதுப்புது பொருட்களின் மீதான ஆசை உச்சத்தை தொட்டிருக்கின்றது. இதுபோன்ற காலகட்டத்தில் நன்மையை பெறுவதற்காக தங்களின் பிரியமான பொருட்களை செலவு செய்வதும், தமது தேவைகளை தியாகம் செய்வதும் ஒரு உலகியல் வாதிக்கு விநோதமான செயலாகும். இந்த காலகட்டத்திலும் திருக்குர்ஆனின் இந்த போதனையின் ஞானத்தைப் பெற்று அதன்படி அமல் செய்கின்ற மக்கள் இன்றும் இருக்கின்றார்கள் என்பது இந்த உலகியல் வாதிகளுக்கு தெரியாது. கட்டுப்படுதலில் முன்னேறச் செய்கின்ற நன்மையை அடைய முயற்சி செய்கின்றனர். அந்த கட்டுப்படுதலின்படி அமல் செய்யும் போது தனக்கு எந்த விஷயம் பிரியமானது என்று அவர்கள் பார்ப்பதில்லை. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்படுவது மட்டும் தான் அந்நேரத்தில் அவர்களுக்கு மிகவும் பிரியமானதாக இருக்கின்றது. இறையச்சத்தில் முன்னேற செய்கின்ற நன்மைகளை பெறுவதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர். இப்படிப்பட்ட மக்கள் யார் என்று உலகின் பெரும் பகுதிக்கு தெரியாது. அந்த மக்கள் யார் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் மற்றும் காலத்தின் இமாமோடு தம்மை இணைத்துக் கொண்டு உண்மையான நன்மையை அடைவதற்குரிய ஞானத்தை பெற்ற மக்கள் ஆவர். அவர்கள் நன்மைகள் எனும் உயரமான மினாராக்களின் ஒளியிலிருந்து நன்மையின் வழியில் நடப்பதற்குரிய வழிமுறைகளை கற்றிருக்கின்றார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இருந்து அருட்களை பெற்ற மக்களின் வழி நடப்பவர்களாவர்.

ஒரு ஹதீஸில் வருகின்றது. لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰی تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ இந்த வசனம் இறங்கிய பிறகு ஹஸ்ரத் அபு தல்ஹா அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். கூறினார்கள். எனது சொத்துக்களில் எனக்கு மிகவும் பிடித்தமான சொத்து பேரோஹா என்ற பேரீச்சை பழ தோட்டமாகும். நான் அதனை இப்போது அல்லாஹ்வின் வழியில் கொடுக்கின்றேன் என்று கூறினார்கள். ஆக, இந்த மக்களே ஒளிமயமான நட்சத்திரங்களாக இருந்தார்கள். மேலும் நன்மையின் பாதைகளை வகுக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். எனவே, இந்த சஹாபாக்களின் உதாரணத்தை நமக்கு கூறி காலத்தின் இமாம் அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டியிருக்கின்றார்கள். அன்னார் தனது பல்வேறு மேற்கோள்களில் திருக்குர்ஆனின் கட்டளைகளை மற்றும் போதனைகளை தெள்ளத் தெளிவாக விளக்கி இருக்கின்றார்கள். நன்மையை அடைவதற்குரிய அறிவையும், ஞானத்தையும் நமக்கு தந்திருக்கின்றார்கள். தியாகங்களின் உயர் தரத்தை பற்றியும் நமக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள்.

மேலும் ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வீணான, பயனற்ற பொருட்களை செலவு செய்து எந்தவொரு மனிதனும் நன்மை செய்ததாக வாதிட முடியாது. நன்மையின் வாசல் குறுகளானதாகும். பயனற்ற பொருளை செலவு செய்து அந்த வாசலில் எவரும் நுழைய முடியாது என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰی تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ அதாவது உங்களுக்கு மிக பிரியமான பொருளை நீங்கள் செலவு செய்யாதவரை நன்மையை பெற முடியாது என்ற இறைவசனம் மிகத்தெளிவான கட்டளையாகும். எதுவரை மிகவும் விருப்பத்திற்குரிய மிகவும் அன்பிற்குரிய பொருட்களை செலவு செய்வதில்லையோ அதுவரை உங்களால் அன்பிற்குரியவர் என்ற அந்தஸ்தை பெற முடியாது. உங்களால் கஷ்டங்களை சகிக்க முடியாதென்றால், உண்மையான நன்மைகளை மேற்கொள்ள முடியாதென்றால் நீங்கள் எவ்வாறு வெற்றி பெற முடியும் ? சஹாபாக்கள் மிக இலகுவாக அந்த அந்தஸ்த்தை அடைந்து விட்டார்களா ? உலகியல் பட்டங்களை பெறுவதற்காக

எந்த அளவுக்கு செலவுகள் செய்ய நேரிடுகின்றன ? கஷ்டங்களை எதிர் கொள்ள நேரிடுகின்றன ? அதற்கு பிறகு தான் மிக சாதாரண பட்டங்கள் கூட மனிதனுக்கு கிடைக்கின்றன. அவ்வாறிருக்க சற்று சிந்துத்துப் பாருங்கள். உள்ளத்திற்கு ஆறுதலும், நிம்மதியும் வழங்கக்கூடிய மற்றும் இறைவனின் திருப்திக்குரிய அடையாளத்தையும் தரக்கூடிய ரலியல்லாஹு அன்ஹும் (அவர்கள் மீது அல்லாஹ் திருப்தி கொண்டான்) என்ற பட்டம் மிக இலகுவாக சஹாபாக்களுக்கு கிடைத்திருக்க முடியுமா ? உள்ளத்தின் உண்மையான மகிழ்ச்சிக்கு காரணமான இறைதிருப்தி என்பது தற்காலிக கஷ்டங்களை சகித்துக் கொள்ளாத வரை கிடைக்கவே முடியாது. எவர்கள் இறை திருப்தியை பெறும் பொருட்டு துன்பங்களை பொருட்படுத்தவில்லையோ அவர்களே அருளுக்குரியவர்கள் ஆவர். ஏனென்றால் நிரந்தரமான மகிழ்ச்சி மற்றும் நிரந்தமான நிம்மதி என்பது தற்காலிக கஷ்டங்களுக்கு பின்னர் தான் ஒரு நம்பிக்கையாளருக்கு கிடைக்கின்றது.

ஒரு சபையில் ஜமாஅத் சகோதரர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: உலகில் மனிதன் செல்வத்தின் மீது மிகவும் அன்பு கொள்கின்றான். எனவே தான் கனவு விளக்கங்களில் கூறப்படுகின்றது. ஒரு மனிதன் கனவில் கல்லீரல் ஒருவருக்கு கொடுப்பதாக கண்டால் அதன் பொருள் செல்வமாகும். எனவே தான் உண்மையான இறையச்சம் மற்றும் ஈமானை பெறுவதற்கு இறைவன் இந்த கட்டளையை வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் வழியில் பொருளை தியாகம் செய்வது என்பது மனிதனின் நற்பாக்கியம் மற்றும் இறையச்சத்திற்குரிய அடையாளமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏற்படுத்திய இ இவ்விஷயங்களை ஒரு பக்கம் கேட்டு விட்டு மறுபக்கம் முகத்தை திருப்பி விடவில்லை. மாறாக, இவ்விஷயங்களை கேட்ட பிறகு ஜமாஅத்தை சேர்ந்தவர்கள் தியாகங்களின் உயர் முன்னுதாரனங்களை நிலைநாட்டியுள்ளார்கள்.

ஜமாஅத்தின் பொருள் தியாகத்தின் தரத்தை கண்டவாறு ஓரிடத்தில் அன்னார் இவ்வாறு கூறினார்கள்: நூற்றுக்கணக்கான மக்கள் நமது ஜமாஅத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்களுக்கு உடுப்பதற்கு கூட ஆடை இல்லை. பல கஷ்டங்களுக்குப் பிறகு தான் அவர்களுக்கு அணிவதற்கு கூட ஆடை கிடைக்கின்றது. அவர்களுக்கு சொத்து என்று ஒன்றும் கிடையாது. ஆனால் அவர்களின் எல்லையற்ற விசுவாசம் மற்றும் அவர்களின் அன்பு மற்றும் நேசத்தை கண்டு இயல்பில் ஒரு ஆச்சரியமும், வியப்பும் ஏற்படுகின்றது.

மற்றொரு இடத்தில் அன்னார் கூறினார்கள்: நமது ஜமாஅத்தில் காணப்படுகின்ற தூய மாற்றங்களும் முன்னேற்றங்களும் இக்காலத்தில் வேறு எவரிடத்திலும் இல்லை.

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து நேரடியாக பயன் பெற்ற மக்கள் இந்த அந்தஸ்தை அடைந்துள்ளார்கள். மேலும் அன்னாரின் திருப்தி என்ற சான்றிதழையும் பெற்றிருக்கின்றார்கள். ஆனால் இந்த தூய்மையும், விசுவாசமும் அவர்களின் காலத்தோடு முடிந்து விட்டதா ? நிச்சயமாக இல்லை. நான் கூறியது போன்று இன்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் அப்படிப்பட்ட ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இருக்கின்றார்கள். அவர்கள் தூய்மையிலும், விசுவாசத்திலும் முன்னேறி இருக்கின்றார்கள். ஒரு சில அல்லது குறிப்பிட்ட பகுதியில் மட்டும் அப்படிப்பட்ட மக்கள் இல்லை. மாறாக, ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கின்றார்கள். மேலும் உலகின் பல்வேறு நாடுகளில் பரவி இருக்கின்றார்கள். அவர்கள் உங்களுக்கு பிரியமான பொருளை நீங்கள் செலவு செய்யாதவரை நன்மையை பெற முடியாது என்று போதனையின் சரியான ஞானத்தை பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் தியாகங்களில் முன்னேறிக் கொண்டே செல்கின்றார்கள்.

அவர்களில் சிலரின் உதாரணத்தை இப்போது எடுத்துரைக்கின்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று அவர்களிடத்தில் உடுத்துவதற்கு கூட ஆடை இல்லை. ஆனால் தூய்மையிலும், விசுவாசத்திலும் முன்னேறி இருக்கின்றனர். இதற்கு நான் ஒரு உதாரணத்தை தருகின்றேன். அது ஒரு பெண்ணின் உதாரணமாகும். அந்த பெண்ணும் எப்படிப்பட்ட பெண் என்றால் கண் பார்வையற்ற பெண் ஆவார்.

சிராலியோனிலிருந்து நமது முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள். இங்கு கெம்பாரோ என்ற இடத்தில் ஒரு ஜமாஅத் இருக்கின்றது. அங்கு கண் பார்வையற்ற பெண் இருக்கின்றார். அவர் தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்கு 2000 லியோன் வாக்குறுதியாக கொடுத்திருந்தார். நாங்கள் அந்த சந்தாவை வசூல் செய்வதற்கு அவரிடம் சென்றிருந்தோம். அப்போது அந்த பெண்மணி கூறினார். சந்தா கொடுப்பது பற்றி நான் கவலை அடைந்திருந்தேன். கண் பார்வை இல்லாததினால் சந்தா கொடுக்கும் அளவிற்கு எனக்கு எந்த வருமானமும் இல்லை. ஆனால் நான் வாக்குறுதி கொடுத்து விட்டேன். எனவே எப்படியும் நான் அதை கொடுத்து விடுவேன். பின்னர் துஆவில் மும்முரமாக ஈடுபட்டார். இதற்கிடையில் ஒரு அந்நியர் அந்த கிராமத்திற்கு வந்தார். அந்த மனிதர் அந்த பெண்ணின் வீட்டை கடந்து சென்றார். அந்த பெண் தனது வீட்டின் முற்றத்தில் அமர்ந்திருந்தார். அந்த நபரை அழைத்து அந்த பெண் கூறினார். என்னிடத்தில் தலையில் கட்டக்கூடிய 2000 லியோன் மதிப்பிலான துணி ஒன்று உள்ளது. அதை நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதன் மதிப்பு 10000 திலிருந்து 15000 லியோனாக இருந்தது. எனவே அந்த மனிதர் இவ்வளவு மிகக் குறைந்த விலைக்கு ஏன் விற்கின்றீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்த பெண்மணி, எனக்கு தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுக்க வேண்டும். ஆனால் என்னிடத்தில் அதற்கு பணம் ஒன்றுமில்லை என்று கூறினார். அந்த மனிதரோ அந்த ஆடையை வாங்கிக் கொண்டார். அதற்கு பகரமாக 2000 லியோனையும் கொடுத்து விட்டார். அவர் நல்ல மனிதராக இருந்ததால் பின்னர் அந்த துணியையும் திருப்பி கொடுத்து விட்டு என் சார்பாக இதை வைத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறிவிட்டார்.

ஆப்ரிக்காவின் தொலை தூர பகுதியில் வசிக்கும் படிப்பறிவற்ற, கண் பார்வையற்ற ஒரு பெண்மணியின் மனத்தூய்மைக்கான உதாரணமாகும் இது. நிச்சயமாக இந்த மனத்தூய்மை அல்லாஹ்வால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

இந்தியாவிலுள்ள ராஜஸ்தான் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் எழுதுகின்றார்கள். இங்கு போலாபாலி என்ற ஒரு ஜமாஅத் இருக்கின்றது. நான் சுற்றுப் பயணத்திற்காக அங்கு சென்றேன். அங்கு 65 வயது கொண்ட நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவர் பெரும்பாலும் நோயுற்று இருப்பார். அவருக்கு எந்த வருமானமும் கிடையாது. அவர்களுக்கு பொருள் தியாகத்தை பற்றி கூறப்பட்டது. உங்களால் இயன்றதை கொடுக்கும்படி கூறினோம். அவர் 1050 ரூபாய் சந்தாவாக கொடுத்து விட்டார். நான் அல்லாஹ்விற்காக இதனை சேர்த்து வைத்தேன். இது அல்லாஹ்விற்கே உரிய பணமாகும் என்று அவர் கூறினார்.

அடுத்து தூய்மையிலும், விசுவாத்திலும் முன்னேறிய மற்றும் ஒரு நல்லடியாரின் சம்பவத்தை கேளுங்கள். நிச்சயமாக இது செல்வந்தர்களை பின் தங்க செய்துவிடும் சம்பவமாகும்.

பெனின் நாட்டு அமீர் சாஹிப் எழுதுகின்றார். ஒரு பழைய அஹ்மதியின் பெயர் சந்தா கொடுப்பவர்களின் பட்டியலில் இருந்தது. அவருக்கு கவனமூட்டப்பட்டது. அவர் மிஷன் ஹவுஸிற்கு வந்தார். அவர் கூறினார். நீங்கள் ஒரு வாரம் உணவு சாப்பிடாத மனிதரை கண்டுள்ளீர்களா ? எனது ஏழ்மையின் நிலை இவ்வாறு இருக்கின்றது. ஆனால் நான் தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுக்க வேண்டும். அதற்கு என்னிடத்தில் பணம் இல்லை என்று இரவு முழுவதும் நான் அழுது கொண்டிருந்தேன். அல்லாஹ் என்னை சோதிக்கின்றான். மிகக் குறைவான பணத்தை கொடுத்து இப்போது இந்த நேரத்தில் என்னிடம் இது தான் உள்ளது என்று அவர் கூறினார். அதற்கு சந்தா வசூல் செய்யும் நபர் கூறினார். நான் உங்களின் உதவிக்காக கொஞ்சம் பணம் தருகின்றேன் என்று கூறினார். 10 பிரான்ங் ஷிஃபா கொடுத்தார். அதை அவர் திருப்பிக் கொடுத்து சந்தா ஆம் எனக்கு பாக்கி இருக்கின்றது. இந்த பணத்தை வைத்து எனது சந்தா ஆம் பாக்கியை முழுமை செய்யுங்கள் என்று கூறினார். உடுத்துவதற்கு ஆடை இல்லை. ஆனால் விசுவாசத்திலும், தூய்மையிலும் முன்னேறி இருக்கின்றார்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதற்குரிய உதாரணம் இதுவாகும்.

காதியானின் நாயிப் வகீலுல் மால் அவர்கள் எழுதுகின்றார்கள். கொடியத்தூர் ஜமாஅத்தில் தஹ்ரீகே ஜதீது சந்தாவின் முக்கியத்துவம் ஜுமுஆ வில் எடுத்துரைக்கப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் குரலுக்கு செவிமடுத்த சில நல்லடியார்களைப் பற்றி கூறப்பட்டது. ஜுமுஆவிற்குப் பிறகு லஜ்னா இமாயில்லாஹ்வின் தலைவி தனது வீட்டிற்கு சென்றார்கள். வீட்டிற்கு சென்று தனது ஒரு பெரிய தங்க மாலையை எடுத்து வந்து இதை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். மார்க்கத்திற்காக தனது விருப்பமான நகைகளை தியாகம் செய்யக்கூடிய இந்த பண்பு உலகின் பல்வேறு பகுதிகளிலும் நமது ஜமாஅத் பெண்களிடம் காணப்படுகின்றது. இது அஹ்மதி பெண்களுக்கே உரிய சிறப்பம்சம் ஆகும்.

ஜெர்மனியிலுள்ள நேஷனல் செகரட்டரி தஹ்ரீகே ஜதீது அவர்கள் எழுதுகின்றார்கள்: இங்கு ஒரு ஜமாஅத்தில் தஹ்ரீகே ஜதீது தொடர்பாக கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கு முடிவுற்றவுடன் ஒரு நபர் தனது மனைவியின் நகையை எடுத்துக் கொண்டு தஹ்ரீகே ஜதீத் அலுவலகத்திற்கு வந்தார். திருமணத்தின் போது அணிவிக்கப்பட்ட நகையை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுத்து விட்டார்கள்.

லாஹூர் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஒரு பெண்மணி தஹ்ரீகே ஜதீதில் ஏற்கனவே உயர் தரமான வாக்குறுதி கொடுத்திருந்தார். டார்கட்டை முழுமைப்படுத்துவதற்காக மேலும் சந்தா கொடுக்கும்படி அவர்களிடத்தில் இன்னும் சந்தா கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட போது உடனடியாக எழுந்து தனது அறைக்கு சென்றார். சென்று தனது நகைகளின் ஒரு டப்பாவை எடுத்து வந்தார். அதிலிருந்து ஒரு நகையை எடுத்து தஹ்ரீகே ஜதீது சந்தாவிற்காக கொடுத்து விட்டார்.

இப்போது பாருங்கள் ! ஒரு பெண்மணியோ இந்தியாவின் தென் பகுதியில் இருக்கின்றார். வேறுபட்ட கோத்திரம். வேறுபட்ட மொழி. மற்றொரு பெண்ணோ பாகிஸ்தானிலுள்ள பஞ்சாபை சார்ந்தவராக இருக்கின்றார்கள். மூன்றாவது பெண்மணியோ ஜெர்மனியில் இருக்கின்றார். ஆனால் பொருள் தியாகத்திற்கான ஆன்மா மற்றும் எண்ணம் ஒன்றாக இருக்கின்றது. இப்படிப்பட்ட பொருள் தியாகத்திற்கான உயர் தரத்தை தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமது ஜமாஅத்தில் உருவாக்கி இருக்கின்றார்கள். இது அல்லாஹ் அஹ்மதிகள் மீது செய்து வருகின்ற அருளாகும். அல்லாஹ்வின் அருளால் புதிய அஹ்மதிகள் சந்தாவில் மிக அதிகமாக முன்னேறி வருகின்றார்கள். அல்லாஹ் பொருள் தியாகம் செய்யக்கூடியவர்களுக்கு எவ்வாறு அருள் செய்கின்றான் ? மற்றும் பொருள் தியாகத்தின் மூலமாக எவ்வாறு ஈமான் அதிகரிக்கின்றது ? எவ்வாறு அவர்களது ஈமானிலும், மனத்தூய்மையிலும் முன்னேற்றம் ஏற்படுகின்றது ? என்பது தொடர்பான சில உதாரணங்களை நான் கூறுகின்றேன்.

நாயிப் வகீலுல் மால் காதியான் அவர்கள் எழுதுகின்றார்கள். பத்தபிரியம் கேரளாவை சார்ந்த ஒரு நண்பர் என்னிடம் தொலைபேசியில் கூறினார். ஆப்ரிக்காவை சார்ந்த மக்கள் மிகவும் ஏழைகளாக இருந்த போதும் மிக அதிகமாக சந்தாவில் பங்கு பெறுகின்றார்கள் என்று ஹுஸூர் கடந்த ஆண்டு குத்பாவில் கூறியிருந்தார்கள். ஆனால் நாமோ செல்வம் படைத்தவர்களாக இருக்கின்றோம். தஹ்ரீகே ஜதீத் வாக்குறுதியாக நான் 2,00,000 ரூபாய் கொடுத்துள்ளேன். அதை 5,00,000 ரூபாயாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார். சிறிது காலத்திற்குப் பிறகு அவர் வாக்குறுதியை முழுமை செய்து விட்டார். மேலும் அவர் கூறினார். நான் வாக்குறுதியை அதிகப்படுத்தியதற்கு பிறகு எனது தொழிலில் அல்லாஹ் அளவற்ற அருள் செய்து விட்டான். தற்போது என்னிடத்தில் எந்த அளவுக்கு பணிகள் உள்ளன என்றால் அதை என்னால் சமாளிக்க முடியவில்லை.

அடுத்து கர்நாடகாவை சார்ந்த இப்ராஹீம் என்ற தஹ்ரீகே ஜதீத் இன்ஸ்பெக்டர் கூறுகின்றார். குல்பர்கா ஜமாஅத்தைச் சார்ந்த ஒரு இளைஞர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் அறிவுரைக்கு ஏற்ப தனது ஒரு மாத சம்பளம் 73,600 ரூபாயை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார். ஆனால் சந்தா கொடுக்கின்ற சமயத்தில் மிகவும் அதிகப்படுத்தி 1,00,511 ரூபாய் கொடுத்தார். அதன் விளைவாக அவருக்கு அல்லாஹ் ஒரு அற்புதத்தை காட்டினான். அவருடைய ஒரு பெரிய தொகை ஒரு நபர் கொடுக்க வேண்டியதிருந்தது. பல முறை அதை கேட்ட பின்னரும் அந்த பணம் கிடைக்கவில்லை.

பணம் கிடைக்காது என்று அவர் அவநம்பிக்கையில் இருந்த போது அந்த நபர் திடீரென ஒரு நாள் வந்து அந்த இளைஞருக்கு கொடுக்க வேண்டிய முழு தொகையையும் திரும்ப கொடுத்து விட்டார்.

பொருள் தியாகத்தின் விளைவாக அல்லாஹ் ஈமானில் முன்னேற்றத்தை வழங்குகின்றான். உலகத்தின் பல்வேறு இடங்களில் அதற்கான காட்சி நமக்கு காணக் கிடைக்கின்றது.

உஸ்பெக்ஸ்தானை சார்ந்த ஒரு புதிய அஹ்மதி நண்பர் கூறுகின்றார். நான் பைஅத் செய்த பிறகு சந்தா கொடுக்க ஆரம்பத்திலிருந்து எனது வருமானத்தில் அசாதாரணமான முன்னேற்றம் ஏற்பட்டது. இந்த ஒரு வருடத்தில் நான் ஈட்டிய இந்த வருமானத்தை கடந்த 13 ஆண்டுகளில் நான் ஈட்டியது கிடையாது. இது இறைவழியில் நான் செலவு செய்ததன் பரக்கத் என்பதில் எனக்கு இப்போது முழுமையான நம்பிக்கை ஏற்பட்டு விட்டது என்று கூறுகிறார்.

புதிதாக வரக்கூடியவர்களும் மனத்தூய்மையிலும், விசுவாசத்திலும் முன்னேறி வருகின்றனர். அரபு நாட்டை சார்ந்த ஒரு நண்பர் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பைஅத் செய்தார். அல்லாஹ்வின் அருளால் அவரது மனைவி இப்போது பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார். இந்த ஆண்டு கணவன், மனைவி இரண்டு பேரும் சுமார் 14,000 பவுண்ட் தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுத்திருக்கின்றார்கள். உள்ளூர் ஜமாஅத்தில் ஒரு குடும்பம் சார்பாக அதிக அளவில் கொடுக்கப்பட்ட தொகை இதுவாகும்.

ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பொருள் தியாகத்தின் சம்பவங்கள் எண்ணற்றதாகும். நான் கூறியது போன்று இக்காலத்தில் உலக இன்பங்களைப் பெறுவதற்கு தான் மக்கள் முன்னுரிமை கொடுக்கின்றார்கள். ஆனால் அஹ்மதி அல்லாஹ்வின் திருப்திக்காக பொருள் தியாகம் செய்கின்றார்.

உகண்டா ரீஜனை சார்ந்த ஒரு முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார். நாங்கள் ஒரு ஜமாஅத்தின் சகோதரருக்கு தஹ்ரீகே ஜதீத் வாக்குறுதியை முழுமை செய்யும் படி அறிவுரை கூறினோம். பாவம் ! அவரிடத்தில் எதுவுமில்லை. அவருடைய வாக்குறுதிக்குரிய தொகையில் அவருடைய வீட்டில் ஒரு கோழி இருந்தது. அதை அவர் கொடுத்து விட்டார்.

அமெரிக்காவின் நேஷனல் செகரட்டரி கூறுகின்றார். 11 வயதுடைய ஒரு சிறுவன் ஒரு வீடியோ கேம் வாங்குவதற்காக பைசா சேமித்து வந்தான். அந்த சிறுவனிடம் தஹ்ரீகே ஜதீத் சந்தாவை பற்றி கூறப்பட்ட போது வீடியோ கேம் வாங்குவதற்காக அந்த சிறுவன் தான் சேர்த்து வைத்திருந்த 100 டாலர் பணத்தை சந்தாவாக கொடுத்து விட்டார். இவ்வாறு அந்த சிறுவன் உலகத்தை விட மார்க்கதிற்கு முன்னுரிமை வழங்குவேன் என்ற தனது வாக்குறுதியை முழுமை செய்து காட்டினான்.

யுகண்டா காங்கா ரீஜியனிலிருந்து ஒரு முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். எங்களது பகுதியை சார்ந்த ஒரு சிறுவன் தொழுகையை கற்றுக் கொண்டார். பின்னர் இப்போது தமது பகுதி மக்களுக்கு அவர் தொழ வைத்து வருகின்றார். அமீர் சாஹிப் அவர்கள் அவனை ஊக்குவிக்கும் வகையில் பரிசு ஒன்றை கொடுத்தார். அவர் அந்த பைசாவை என்னிடத்தில் தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுத்து விட்டார்.

உலகின் ஒவ்வொரு மூலையிலும் இதுபோன்ற பொருள் தியாகத்தின் ஆன்மாவை புரிந்து கொள்ளக்கூடிய விசுவாசமிக்க நல்லடியார்களை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கி வருகின்றான். இந்த புத்துணர்வு எப்போதும் அதிகரித்துக் கொண்டே இருக்கும் படி அல்லாஹ் செய்வானாக. மேலும் அனைவரும் இறையச்சத்திலும் முன்னேறிக் கொண்டு செல்பவர்களாக இருக்கட்டுமாக.

நான் தற்போது தஹ்ரீகே ஜதீதின் புதிய நிதியாண்டின் அறிவிப்பை செய்தவாறு கடந்த ஆண்டின் அறிக்கையையும் சுருக்கமாக எடுத்து வைக்கின்றேன். அல்லாஹ்வின் அருளால் அக்டோபர் 31 ஆம் தேதியோடு தஹ்ரீகே ஜதீதின் 81 ஆண்டு நிறைவடைந்து விட்டது. நவம்பர் 1 ஆம் தேதியிலிருந்து தஹ்ரீகே ஜதீதின் 82 ஆது ஆண்டு ஆரம்பமாகி உள்ளது. 92,17,800 பவுண்ட் இந்த வருடம் தஹ்ரீகே ஜதீத் சந்தா வசூல் ஆகியுள்ளது. அல்ஹம்துலில்லாஹ். கடந்த ஆண்டை விட 7,47,000 பவுண்ட் அதிகமாக வசூல் ஆகியுள்ளது. பாகிஸ்தானில் கஷ்டமான சூழ்நிலைகள் நிலவிய போதும் தொடர்ந்து அவர்கள் தங்களது பொருள் தியாகத்திற்குரிய அந்த தரத்தில் நிலைபெற்றிருக்கின்றார்கள். அவர்கள் முதல் இடத்திலேயே இருக்கின்றார்கள்.

பாகிஸ்தான் அல்லாத மற்ற நாடுகளில் ஜெர்மனி முதல் இடம் வகிக்கின்றது. இரண்டாவது இடத்தில் இங்கிலாந்து உள்ளது. அடுத்து அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா, மத்திய கிழக்குப் பகுதியை சார்ந்த ஒரு நாடு, இந்தோனேஷியா, மீண்டும் மத்திய கிழக்குப் பகுதியை சார்ந்த ஒரு நாடு, கானா உள்ளது.

இந்தியாவின் முதல் பத்து ஜமாஅத்துகளின் பெயர்கள் இவ்வாறாகும். கருளாய் (கேரளா), ஹைதராபாத், கோழிக்கோடு (கேரளா), காதியான், பத்தபிரியம், கன்னூர் டவுன், பைங்காடி, கொல்கத்தா, பெங்கால், பெங்களூர், கர்நாடகம், சூலூர் (தமிழ்நாடு)

தியாகங்களின் அடிப்படையில் இந்தியாவின் முதல் பத்து மாநிலங்களின் பெயர்கள் இவ்வாறாகும். கேரளா, தமிழ்நாடு, கர்நாடக், ஆந்திரா, ஜம்மு காஷ்மீர், ஒடிசா, பஞ்சாப், பங்கால், தில்லி, மஹாராஷ்டரா.

அல்லாஹ் இந்த சந்தாக்களில் பங்கு பெற்ற அனைவரின் வாழ்நாளிலும், செல்வத்திலும் அளவற்ற பரக்கத்துகளை செய்வானாக. மேலும் அவர்களை தூய்மையிலும் விசுவாசத்திலும் முன்னேற்றமடையச் செய்வானாக. ஆமீன்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 06.11.2015
Tamil Translation : Moulavi. Abdur Rahman Tahir Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516